# பொதுக்காலம் 23ஆம் வாரம் - ஞாயிறு

## இரண்டாம் ஆண்டு

### திருப்பலி முன்னுரை

ஆண்டவர் இயேசுவுக்குள் மிகவும் அன்பான சகோதரமே! நம் தாயாம் திரு அவையோடு இணைந்து ஆண்டின் பொதுக்காலம் 23ஆம் ஞாயிறை சிறப்பிக்க அழைக்கப்படுகிறோம்.

இன்றைய அவசர உலகின் அவலங்களில் யாருக்கும், எச்சூழலிலும் செவிமடுக்கனேரமில்லை. எல்லாரும் இயந்திரமாக இயங்கிக் கொண்டிருப்பதால் பிறர் கூறுவதையும், சொல்ல இயலாமல் தவிக்கும் மனநிலையைக் கேட்கவும் நேரமும் இல்லை, ஆர்வமும் இல்லை என்னும் இறுக்கமான நிலையில்தான் பெரும்பாலானோர் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆனால் இன்றைய வழிபாடு இறைவனாகிய ஆண்டவர் நமது குறைகளை அகற்றிடவும், தேவைகளைப் பூர்த்தி செய்திடவும், வல்லமையுள்ள தெய்வமாக நம்மைத் தேடி வருகின்றார் என்ற நம்பிக்கையை இன்றைய நாளில் இறைவன் தருகிறார்.

“அனைத்தையும் நன்றாகச் செய்தார், பேச வைத்தார், கேட்க வைத்தார்” என்று மக்கள் சொல்லும் அளவிற்கு பல்வேறு புதுமைகளைச் செய்து இறையாட்சி பணியை இம்மண்ணில் மக்களின் மனங்களில் விதையாய் விதைத்துச் சென்றுள்ளார் இயேசு. கேட்பதும் பேசுவதும் கடவுள் நமக்கு தந்த கொடை. அதை நாள்தோறும் ஆழப்படுத்திக் கொண்டே செல்வோம்.

நாவு கட்டவிழ்ந்து, தெளிவாகப் பேசிய மனிதரைப் போல, நாமும் தெளிவாகப் பேசுகின்ற அருளையும், பிறர் துன்பங்களுக்கு செவிமடுக்கும் மக்களாய் வாழ முயற்சி செய்வோம். அதற்கான வரம் வேண்டி இக்கல்வாரிப் பலியில் முழுமையாய் பங்கேற்போம்.

### முதல் வாசக முன்னுரை

அன்பார்ந்தவர்களே! இன்றைய முதல் வாசகம் இறைவாக்கினர் எசாயா புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. குறைகளும் தேவைகளும் நிறைந்த மக்களாகிய நம்முடைய தேவைகளைச் சந்திக்கும் நீதியின் அரசராய் நம் இறைவன் வரப்போகிறார் என்று உறுதியளிக்கும் இம்முதல் வாசகத்திற்கு சிறந்த மனதுடன் செவிசாய்ப்போம்.

### இரண்டாம் வாசக முன்னுரை

அன்பார்ந்தவர்களே! இன்றைய இரண்டாம் வாசகம் கிறிஸ்து ஆண்டவரை வணங்கும் ஒரே குடும்பமான நம்மிடையே இருக்கும் ஏற்றத்தாழ்வுகளைக் களைய அழைப்பு விடுக்கும் இவ்வாசகத்திற்குச் செவிசாய்ப்போம்.

### மன்றாட்டுக்கள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. நல்லாயனே எம் இறைவா! எம் தாய்த் திரு அவையயில் உள்ள அனைவரும் ஒற்றுமையுடனும், எவ்வித பாகுபாடுகளுமின்றி மக்களை இறையாட்சிப் பாதையில் வழிநடத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. வாழ்வளிப்பவரே எம் இறைவா! எம் நாட்டுத் தலைவர்களையும் அரசாங்க அதிகாரிகளையும் ஆசீர்வதியும். இவர்கள் தங்களால் இயன்ற மட்டும் அனைவரையும் முன்னேற்றப் பாதையில் வழிநடத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. வல்லமை பொழியும் இறைவா! எங்கள் பங்கினையும் நாங்கள் வாழும் ஊரினையும் நிறைவாக ஆசீர்வதியும். நாங்கள் உமது வழியில் நடந்து வாழ்வின் அனைத்து நிலைகளிலும் வளர்ச்சியடைய அருள் பொழிய வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

4. இரக்கத்தின் இறைவா! பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்டு மரித்த அனைத்து ஆன்மாக்களுக்கும் முடிவில்லா பேரின்ப வாழ்வைத் தந்து உம்மை முகமுகமாய் தரிசிக்கும் பேற்றைத் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நன்றி : அருட்சகோதரி ஷீலா FST, மேலமெஞ்ஞானபுரம்.**

“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 944 314 0660; www.arulvakku.com